# இந்திய அரசியலமைப்பு - பகுதி - 22

## 22] நெருக்கடி கால வகைமுறைகள்

### பாடக்குறிப்புகள்

**(பகுதி - XVIII) (சரத்துக்கள்: 352-360)**

**தேசிய நெருக்கடி நிலைமை(சரத்து-352)**

- இந்தியாவின் பாதுகாப்பு, வெளித்தாக்குதலாலோ, ஆயுதக் கலகங்களாலோ அல்லது போரினாலோ அச்சுறுத்தப்படுகிறது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால், நெருக்கடி நிலையினைப் பிரகடனப்படுத்தலாம்.
- இது இந்தியாவின் முழுமைக்குமோ அல்லது ஒரு பகுதிக்கோ பொருந்துமாறு செய்யலாம்.
- உள்நாட்டு கலவரம் என்பது ஆயுத கலகங்களென 44 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம், 1978-ன் படி மாற்றப்பட்டது.
- நெருக்கடி நிலை அறிவிப்பினை தொடர்ந்து ஒரு அறிவிப்பின் வாயிலாக மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ இயலும்.
- அமைச்சரவையின் எழுத்து மூலம் கொடுக்கப்பட்ட முடிவின் படி குடியரசுத் தலைவர் நெஉக்கடி நிலைமையை பிரகடனப்படுத்தலாம்.
- அறிவிக்கப்பட்ட பிரகடனம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் முன்பு சமர்பிக்கப்பட வேண்டும். அதனை, இரு அவைகளும் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அப்பிரகடனம் ஒரு மாதத்திற்குல் தன் செயல்திறனை இழந்துவிடும். தனிப் பெரும்பான்மை பலத்தால் நிறைவேற்றப்பட்டால் 6 மாதங்கள் வரை தொடர்ந்து செயல்பாட்டில் இருக்கும்.
- பிரகடன காலத்தில் மக்களவை கலைக்கப்பட்டிருந்தால், புதிதாக அமைக்கப்படும் மக்களவை முதல் அமர்விலிருந்து 30 நாட்களுக்குள்ளாக நிறைவேற்ற வேண்டும்.

- மக்களவை எளிய பெரும்பான்மை பலத்தில் நெருக்கடி நிலைமை பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், குடியரசுத் தலைவர் அப்பிரகடனத்தை ரத்து செய்யவேண்டும்.
- பிரகடனத்தை ஏற்காத வகையில் தீர்மானம் கொண்டுவர மக்களவையின் மொத்த உறுப்பினர்களில் 10 ல் ஒரு பங்கினர் கையெழுத்திட்ட அறிவிக்கையினை மக்களவை கூட்டத்தொடரில் இருக்கும் போது சபாநாயகரிடமும், கூட்டத்தொடர் இல்லாதபோது குடியரசுத் தலைவரிடமும் கொடுக்கப்பட்டால், அவ்வறிக்கை கிடைத்த 14 நாட்களுக்குள் சிறப்பு அமர்வினை கூட்ட வேண்டும்.
- பல்வேறு அடிப்படையில், பல்வேறு வகையான நெருக்கடி நிலைமை பிரகடனங்களை அறிவிக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவருக்கு உள்ளது. எனவே ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனம் இருப்பினும் மேலும் ஒரு நெருக்கடி நிலைமை பிரகடனத்தை குடியரசுத் தலைவர் அறிவிக்கலாம்.

**தேசிய நெருக்கடி நிலைமை பிரகடனத்தின் விளைவுகள்:**

1. மத்திய அரசின் நிர்வாக அதிகாரம் நீட்டிக்கப்பட்டு எந்த ஒரு மாநிலாரசாங்கத்திற்கும் அம்மாநில நிர்வாகம் எவ்வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என ஏவுரை கொடுக்கலாம்.
2. மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் சட்டமியற்ற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
3. மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான வருவாய் பகிந்தளிப்பை மாற்றியமைக்க மத்திய அரசிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இது குறித்து குடியரசுத் தலைவர் உத்தரவிடலாம்.(சரத்து-354)
4. மக்களவையின் காலத்தை ஒரு ஆண்டுகள் நீட்டிக்கலாம்.

5. போர் மற்றும் வெளித் தாக்குதல் ஆகிய காரணங்களுக்காக நெருக்கடி நிலைமை பிரகடனப்பட்டிருந்தால் சரத்து 19-ல் உள்ள அடிப்படை உரிமைகளின் செயல்திறன் தானாகவே நின்றுவிடும்.(சரத்து-358)
6. குடியரசுத் தலைவர் தனது உத்தரவின் மூலம் மற்ற அடிப்படை உரிமைகளை (சரத்து 20,21 நீங்கலாக) அதன் செயல்திறனை நிறுத்தி வைக்கலாம்.(சரத்து-359)
    - வெளித்தாக்குதல் மற்றும் உள்நாட்டுக் கலவரங்களிலிருந்து ஒவ்வொரு மாநிலத்தையும் பாதுகாப்பது மத்திய அரசின் கடமையாகும்.
    - ஒவ்வொரு மாநில அர்சும் அரசியலமைப்பின் வகைமுறைகளின்படி செயல்படுகிறதா என உறுதி செய்ய வேண்டும்.

**மாநில நெருக்கடி நிலைமை(சரத்து-356)**

- ஒரு மாநில ஆளுநரனுப்பிய அறிக்கை அல்லது வேறு விதத்திலோ லிடைத்த அறிக்கையின் பேரில் அம்மாநில அரசாங்கம் அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளின்படி நடத்த முடியாத சூழ்நிலை உருவாகி உள்ளது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால் அம்மாநிலத்தில் நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தலாம்.
- இப்பிரகடம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் வைக்கப்பட்டு அதனை இரண்டு மாத காலம் முடிவடையும் முன் அங்கீகரிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் 6 மாதங்கள் வரை அமலில் இருக்கும்.
- இந்த ஆறு மாதங்கள் நாடாளுமன்றத்தால் மேலும் நீட்டிக்கப்படலாம். ஆனால் அது 3 ஆண்டுகளுக்கு மேல் நீட்டிக்கக்கூடாது.
- ஆனால் அங்கு ஏற்கனவே நெருக்கடி நிலை இருத்தல் மற்றும் தேர்தல் ஆணையம் தேர்தல் நடத்தும் சூழல் இல்லை என்று கூறினால் 3 ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கலாம்.
- மக்களவை கலைக்கப்பட்டிருந்தால் மறு வடிவமைக்கப்பட்ட புதிய மக்களவை கூடும் காலத்திலிருந்து 30 நாட்களுக்குள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

**விளைவுகள்:**

1. அந்த மாநில ஆளுநரின் பணிகள் மற்றும் அதிகாரங்களை குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொள்வார்.
2. மாநில சட்டமன்றத்தின் அதிகாரங்கள் நாடாளுமன்றத்தால் செயல்படுத்தப்படும் என குடியரசுத் தலைவர் அறிவிப்பார்.
3. நெருக்கடி நிலைமை பிரகடன நோக்கங்களுக்கு அவசியமான சட்ட வகைமுறைகளை குடியரசுத் தலைவர் ஏற்படுத்துவார்.
4. மாநில சட்டமன்றத்தை கலைக்கலாம்.
   - உயர் நீதிமன்றத்தின் செயல்பாட்டில் எம்மாற்றமும் செய்ய முடியாது.

**நிதி நெருக்கடி நிலைமை(சரத்து-360)**

- இந்தியாவின் நிதி நிலைமை அல்லது கடன் நிலைமை அச்சுறுத்தப்படக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது என குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால், நிதி நெருக்கடி நிலைமையைப் பிரகடனப்படுத்தலாம்.
- இந்நெருக்கடியை தொடர்ந்த ஒரு பிரகடனத்தின் வாயிலாக ரத்து அல்லது மாற்றியமைக்க செய்யலாம்.
- இப்பிரகடனம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் சமர்பிக்கப்பட வேண்டும்.
- நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் 2 மாதத்திற்குள்ளாக அங்கீகரிக்க வேண்டும்.

**நிதி நெருக்கடி நிலைமை பிரகடனத்தின் விளைவுகள்**

1. மத்திய அரசு, மாநில அரசுக்குப் பொருந்தும் என்று தோன்றக்கூடிய நிதி ஏவுரைகளை அளிக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.
2. மாநில அரசு ஊழியர்கள், உச்ச மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் போன்றோர்களின் ஊதியத்தை குறைக்க குடியரசுத் தலைவர் ஏவுரைக்கலாம்.

3. மாநில சட்டமன்றங்கள் நிறைவேற்றும் எல்லா நிதி மசோதாக்களையும் தமது பரிசீலனைக்கு அனுப்புமாறு குடியரசுத் தலைவர் உத்தரவிடலாம்.
    - நிதி நெருக்கடி நிலைமை இதுவரை இந்தியாவில் பிரகடனப்படவில்லை.
    - அவசரகால நிலைப் பிரகடனம் நீதிமுறை சீராய்விற்கு உட்பட்டது.

**நெருக்கடி நிலை**

- இந்தியாவில் மூன்று முறை (1962,1971,1975) தேசிய நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1962, 1971 ல் வெளிநாட்டுப் படையெடுப்பின் காரணமாகவும், 1975 ல் உள்நாட்டு கலவரம் என்ற காரணத்திற்காகவும் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

**44- ஆவது சட்டத்திருத்தத்திற்கு பிறகு நெருக்கடி நிலை வகை முறைகள்**

- உள்நாட்டுக் கலவரம் என்பது ஆயுதக் கலவரம் என மாற்றப்பட்டது.
- அமைச்சரவை/ காபினட் எழுத்து மூலம் பரிந்துரை செய்ய வேண்டும்.
- இரண்டு மாதம் என்பது ஒரு மாதமாக குறைக்கப்பட்டது.
- ஒப்புதலுக்கு எளிய பெரும்பான்மை என்பது தனிப்பெரும்பான்மை என மாற்றப்பட்டது.